# முறுகல் சொற்பதம்

கல்வயல் வே.குமாரசாமி



RAMANI

# முறுகல் சொற்பதம்

# இரு படி

கவிமாமணி, கலாபூஷணம்

## கல்வயல் வே. குமாரசாமி

***Kalvayalan's Ambiguity***

நூல்: முறுகல் சொற்பதம்
எழுதியவர்: கவிமாமணி, கலாபூஷணம்
**கல்வயல் வே. குமாரசாமி**
பக்கம்: x + 36
பிரதிகள்: 1000
முதற்பதிப்பு: 2010 ஏப்ரல் 25
பதிப்பு: திருக்கணித பதிப்பகம்,
114, டச் வீதி, சாவகச்சேரி.
ஓவியர்: ரமணி
அட்டை வடிவமைப்பு: யூனி ஆட்ஸ், கொழும்பு
பதிப்புரிமை: **திருமதி மங்கையர்க்கரசி குமாரசாமி**
பெரிய அரசடி, சாவகச்சேரி.
பெறுமதி: ரூபா **125/=**

Title: ***Murugal Sotpatham - Kalvayalan's Ambiguity***
Author: 'Kavimaamani, Kalapooshanam'
***Kalvayal V. Kumarasamy***
Pages: x + 36
Copies: 1000
First Edition: 2010 April 25
Printers: Thirukkanitha Pathipaham,
114, Dutch Road, Chavakachcheri.
Cover: Ramani
Cover Printed: Uni Arts, Colombo.
Copyright: ***Mrs. Mankayatkarasi Kumarasmy,***
Periyarasady, Chavakachcheri.
Value: **125/=**

# அணிந்துரை

பாரதியால் உருவாக்கப்பட்டு பாரதிதாசன் முதலானோரால் பின்பற்றப்பட்டு வளர்ந்த நவீன தமிழ்க் கவிதை, ஈழத்துக்கு வந்தபோது, அது இப் பிராந்தியத்துக்கான சில தனித்துவ அம்சங்களையும் உட்கொண்டதாகப் புதிய பரிமாணம் பெற்றது. அப்புதிய பரிமாணத்தின் மிக முக்கியமான அம்சம், கவிதையின் செய்யுளோசைக்கு அப்பால் பேச்சோசைப்பாங்கு முனைப்புப் பெற்றமையாகும். அத்தன்மையை நவீன தமிழ்க் கவிதைக்குப் பெரிதும் பெற்றுத்தந்தவர் மஹாகவியே. அவரது சமகாலத்தவர்களான முருகையன், நீலாவணன் முதலான வேறு சிலரும் ஈழத்துத் தமிழ்க் கவிதைக்கான தனித்துவ அடையாளங்கள் சிலவற்றை அமைத்துக் காட்டிய ஆளுமை உடையோராக விளங்கினார்கள். அத்தகைய ஆளுமையுடைய ஒரு கவிஞர் குழாத்தின் அடுத்த தலைமுறையில் வந்த மிக முக்கியமான கவிஞர்களுள் ஒருவரே திரு. கல்வயல் வே. குமாரசாமி.

ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பிரதான பண்பாக அதில் மிளிர்ந்த பேச்சோசை, காட்சிப்படுத்தல் முதலானவற்றைக் கொள்ளலாமாயின், அப்பண்புகள் மேலும் விகசித்து நிற்கும் கவிதைகளைத் தந்தவராவார் கல்வயல் வே. குமாரசாமி. உதாரணமாக மஹாகவியின் கவிதைகளில் பேச்சோசை மிளிர்ந்த போதிலும் அக்கவிதைகள் செவ்விய மொழிநடையிலேயே அமைந்தன. ஆனால், கல்வயல் வே. குமாரசாமி பேச்சோசைப் பாங்கான தமது கவிதைகளிலே பேச்சுவழக்குச் சொற்களையும் இயல்பான முறையிலே கையாண்டு, ஈழத்துத் தமிழ்க் கவிதைக்குப் புதிய வனப்பினை - மண்ணின் மணத்தினை கொடுத்தார். காட்சிப் படுத்தல் முதலான உத்திகளை மிகச் செம்மையாகக் கையாண்டார். மஹாகவி, முருகையன், நீலாவணன் முதலானோர் கையாளாத படிமம் முதலான நவீன உத்திகளைக் கையாண்டார். இவ்வாறான பண்புகளின் கூட்டுறவால், ஈழத்தின் பிற கவிஞர்களது படைப்புக்களிலிருந்து வேறுபிரித்து உணரத்தக்க சில தனித்துவ அடையாளங்களைக் கொண்டனவாக அவரது கவிதைகள் அமைந்தன. கவிதையூடாக அவர் கூறமுற்பட்ட விடங்களும்

பெரும்பாலும் சமுதாய நோக்குடையனவாய் அமைந்தன. ஈழத்து நவீன கவிதை முன்னோடிகள் என்று பேசப்படுகின்ற மஹாகவி, முருகையன் முதலானோர் வீச்சோடும் முழு மூச்சோடும் எழுதி வந்த காலத்திலேயே கவிதை படைக்கத் தொடங்கிவிட்ட கல்வயலார் இன்றுவரை ஓயாமல் எழுதிவருகிறார். முன்னைய சந்ததியினருக்குக் கிடைத்த கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் முதலானவை அற்றுப்போய்விட்ட சூழலில் அவர் இன்னமும் எழுதிக் கொண்டிருக்கின்றார். அரசியல் ரீதியாக, சமுதாய ரீதியாக சூழலிற் காணப்பட்ட, காணப்படும் சீர்கேடுகளை, அநீதிகளை விமர்சிக்கத் தவறாத உண்மைக் கவிஞராக விளங்குகிறார். பிடரியில் துப்பாக்கி முனைகள் அழுத்திக் கொண்டிருக்கும் காலப்பகுதியில் வாழும் கவிஞர் காலத்துக்கேற்ற வகையில் பூடகமாகவே பலவற்றையும் பேசவேண்டியுள்ளது. அப்பூடகத் தன்மையும் அவரது கவிதையின் தனித்துவ அடையாளங்களுள் ஒன்றாக இன்று ஆகிவிட்டது.

மேற்குறிப்பிட்ட பண்புகளெல்லாம் துலங்குவதாக அண்மைக் காலத்தில் எழுதப்பட்ட கவிதை ஒன்றை இங்கு சான்றாகக் காட்டலாம்.

## தூண்டிலும் இரையும் அல்லது நடப்பு

தூண்டில் இரையும்
தொடரும் பெருமீனும்
மீண்டு வருமோ!
மனையும்,
மனப் பொறியில் வேண்டாமல் வந்து
விருத்தி உரை வகுக்கும்;
நீண்டு
நிலத்திலே மல்லாந்து கால் நீட்டி
அண்ணாந்த வேளை;
அடுக்களைக் கூரையிலே
கண்பதியும்
கண்ணில்

கடைய உறி மேல் வைத்த
வெண்ணெய், தயிர்முட்டி
வெடில் மூக்கடிக்கு வரும்
உறியும், உறி ஊஞ்சல் ஆடும் கயிறும்,
உறியில் தயிரும்;
தயிர் பிரிய
உள்உருண்ட வெண்ணெய் அடையும்
வெளிர் மஞ்சள் வீசு நறும்
தண்ணென்ற அந்த மணமும்
அம்மத்தடிக்க
காற்றெடுத்து வந்த நெடியும்
அயல் பரவும் நாற்றம்
அடி நாசி நக்க
நா ஊறப் படுத்திருக்கும் பூனை
பளபளப்புக் கண்ணில்;
அடுத்த சுவர் விளிம்பில்
ஊரும் கரப்பான்
சடக்கென்று தாவி உறிச்
சட்டி சரிவில்
கிடக்கும் இடைவெளியின் கீழ்
நுழையப்;
பூனை
படக் கென்று பாய
உறி ஊஞ்சல் பலமாக
அங்கிங்குமாக அசைய
அது அங்கே தொங்க முடியாமல்
தரையிலே 'தொம்' - என்று
வீழ்கையிலே
என்னை விறாண்டிப் பிராண்டிய புண்
சீழ்வடி கின்றதென் செய்வேன்..!

(ஞானம் - செப்ரெம்பர் - 2008)

நீண்ட கால எதிர்பார்ப்புகளும் பாடுகளும் புறச் சக்திகளின் ஆதிக்கப் போட்டியில் அடிபட்டு அழிவுற்று எல்லாம் வெறுங்கனவு என்று ஆகிவிட்ட நமது அரசியுலை கவிஞர் தீர்க்க தரிசனத்தோடு கூறிவிட்டார் போலும்.

இத்தகைய தனித்துவ ஆற்றல் வாய்ந்த கவிஞரை விமர்சன உலகம் கண்டுகொண்டதாக இல்லை. படைப்பை விட படைப்பாளியையே அதிகம் அவதானிக்கின்ற பான்மை கொண்டிருந்த ஈழத்தின் இலக்கிய விமர்சன பிதாமகர்களின் கண்ணில் கல்வயலார் பட்டுவிடாமற் போனமைக்கு காரணங்கள் இருக்கலாம். அவர்களது அரசியல் வட்டத்துக்குள் அவர் அடங்காது போனமை அக்காரணங் களுள் பிரதானமானதாகவும் அமைந்திருக்கலாம். "முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோற் போற்றும்'' பாரம்பரியத்தாலோ என்னவோ பிற்பட்ட காலத்து விமர்சகர்களின் கண்ணிலும் கல்வயலார் அதிகம் பட்டதாகத் தெரியவில்லை. இத்தகைய இலக்கிய அவலம் ஒரு மெல்லிதயம் கொண்ட உண்மைப் படைப்பாளியை எங்கெல்லாம் கொண்டுசேர்க்கும் என்பதற்கு அடையாளமாக அமைகின்றன கல்வயலார் புதிதாக ஆக்கியிருக்கின்ற இந்த முறுகற் சொற்பதங்கள்.

கல்வயல் வே. குமாரசாமி பெரும்பாலான ஈழத்தின் பிற்சந்ததிக் கவிஞர்கள் போல் வெறும் வாசிப்புப் பரிச்சயம் மாத்திரம் கொண்டவ ரல்ல. முற்சந்ததிக் கவிஞர்கள் போல் தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் கணிசமான அறிவுடையவர். தமிழை முறையாகப் படித்தவர். அவருடைய கவிதைகளிற் காணப்படும் சொற்களஞ்சியம் மிக விசாலமானது. அதில், ஊரில் ஒதுக்கப்பட்ட கொச்சைப் பேச்சு முதல் நிகண்டுச் சொல் வரையில் விரவியிருக்கும். யாப்போசையைத் தளர்த்திப் பேச்சோசைக்கு முக்கியத்துவம் கொடுத்து, சீர்தளைகளைப் பொருட்படுத்தாது, அடிவரையறையைப் புறக்கணித்து கவிதையின் பொருளுக்கேற்ப சொற்களையும்

தொடர்களையும் பிரித்து, புதுக்கவிதைத் தோற்றத்தில் கவிதைகளை அச்சிடுகின்ற ஒரு பாரம்பரியத்தில் நிலைபெற்றவர் அவர். ஆனால், அவருடைய கவிதைகள் செவ்விய யாப்பு வடிவங்களில் அமைந்தவை. அவரது யாப்பியலறிவு விதந்து கூறத்தக்கது.

இவ்வாறான தனது புலமைத்துவத்தைத் துலக்கும் வகையிலே ஒரு புதுவிதப் படைப்பை வெளிப்படுத்த முற்பட்டுள்ளார் கல்வயலார். அவர் அப் புதுமைப் படைப்பை ஆங்கில மரபினூடாகப் பெற்றுக்கொண்டதாகக் கூறுகிறார். ஆனால் கடவுள் வாழ்த்து முதல் அதன் அமிசங்கள் பலவற்றிலும் ஆத்திசூடி முதலான தமிழின் அற நூல்களின் சாயலே முனைப்புற்று நிற்கின்றது. இதில் கையாளப்பட்டுள்ள சிலேடைகள் பலவும் சிலாகிக்கத்தக்கன; கவிஞரைப் புலவர் எனக் கருத வைப்பன. முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் யாவும் விதந்து கூறத்தக்கவை; பிற்போக்கானவை; சில விடுவிப்பதற்குக் கடினமானவை; அல்லது எம்மால் விளங்கிக்கொள்ள முடியாதவை; இவை யாவற்றையும் பொருளடிப்படையில் வேறுவேறு தலைப்பிட்டுப் பகுத்துப் பதித்திருப்பின் பொருளில் தெளிவும் ஒருமைப்பாடும் ஏற்பட்டிருக்கும். கவிஞரின் இப் புது முயற்சியில் அவரது நோக்கங்கள் ஈடேறுவதாக! கல்வயலார் தனது வழமையான பாங்கில் எழுதிய கவிதைகளை நூலுருக் கொடுத்து வெளிப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டுவாராயின் அது தமிழ்க் கவிதையுலகுக்கும் அவருக்கும் மிகுந்த பயன் தருவதாயமையும்.

**க. இரகுபரன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.

# என்னுரை

"முறுகற் சொற்பதம்" என் ஒன்பதாவது நூல். முறுகிய அன்பு என்றால் - முதிர்ந்த அன்பு. அது கலந்த முதிர்ந்த மொழி. சொல்லாட்சி "சொற்பதம் கடந்த தொல்லோன்" (மாணிக்கவாசகர்) "சொற்பதமாம் அந்தச் சுந்தரக் கூத்தன்" (திருமூலர்) என்றனர் ஆன்றோர். பக்குவப்பட்ட பதமான சொற்சேர்க்கையே முறுகற் சொற்பதம்.

ஆங்கிலக் கவிதையில் இதனை AMBIGUITY என்பர். வில்லியம் ஷேக்ஸ்பியர், T. S. எலியெட் ஆகியோரின் படைப்புக்களில் இந்த THEME OF MORAL AMBIGUITY காணப்படுகின்றது. அதாவது வெவ்வேறு அர்த்தம் கொடுக்கக்கூடிய வன்மை - வலிமை காணப்படுகின்றது. அவை பல பொருளுக்கு இடம் தரும் சொற்கள். பன்மைப் பொருளுக்கு இடம் தரும் சொற்கள். பன்மைப் பொருண்மைக்கு இடம் தருதல்.

"சொற்களை நீக்கு
சோதி பிறக்கும்" - பேச்சைத் தவிர், மௌனம் சாதி,
ஒரு புதிய ஒளியை உன்னிடத்தில் நீ காண்பாய்.

சொற்களை நீக்கு:- சொற்களிலே சோர்வு தரக்கூடியவற்றை தவிர். - "சொற் சோர்வு படேல்" சோதி - யோசித்துப் பேசி, ஆராய், ஓர் தெளிவு. அங்கே உருவாகி வழிகாட்டும். இவ்வாறு அவரவர் மொழியாற்றல் செம்மைக்கேற்பப் பன்மைப் பொருண்மைக்கு இடம் தருவதே இப்படைப்பு.

இங்கு இப்படைப்பு ஆத்திசூடி முதலான தமிழின் அறநூல்களின் சாயல் என்று குழம்பத் தேவையில்லை. இங்கு எங்களுடைய தமிழ் மரபை அடியொற்றியே மொழிதல் கோட்பாடு பேணப்படுகிறது. ஔவை ஆத்திசூடி முதலான தமிழ் அறநூல்களின் யாப்பை மட்டுமே உள்வாங்கி இருக்கிறேன். இவைகள் பொழுதுபோக்குவதற்கு மட்டுமல்லாது அவ்வப்போது எம்மைப் பழுதுபார்க்கவும் உதவக்கூடிய ஒழுக்க அறநெறிப் பண்புகளை எமது அடுத்த தலைமுறைக்கு நிச்சயம் தரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இவற்றுளே சில பிற்போக்கானவையாகவும் படலாம். அதற்கு எங்களுடைய முதிர்ச்சிதான் சரியான பதிலைத்தரும். எழுந்தமானத்தில் விளங்கிக் கொள்ள முடியாதவர்களும் உண்டுதான். நாம் எவ்வளவிற்கு நூலோடு ஒன்றிப் போகின்றோமோ அவ்வளவிற்கு அவை நன்கு புலனாகும்.

நவீன நெறிச் செறிப்பில் என் இச்சிறு முயற்சி - தற்புதுமை நவீன ஆக்கப் புதுமையின் வேரும் விழுதும் உள்வாங்கி ஓங்கி வளர உதவும். சார வளங்கள் பழமைக்குள்ளே இல்லையென நிராகரிப்பதற்கு இல்லை.

"கடி சொல் இல்லை" எனச் சிந்தித்த தொல்காப்பியரும் சரி, "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என மொழிந்த பவணந்தியாரும் சரி, சமகாலத்தை எந்தளவிற்கு விளக்கியுள்ளனர் என்பது தெளிவு.

இனி, இந்நூல் உங்கள் சர்ச்சைக்குச் சமர்ப்பணம். மொழிக் குறியும் பேச்சுச் செயலும் தொழிற்படு தளம் இங்கு கவனிக்கப்பட வேண்டும். இந்தச் சொல்லாடும் செயல் என்பது மொழிக்கருவி கையாட்சியின் பேறு. இங்கு காணப்படும் சொன்மைப் பண்பும், பொருண்மைப் பண்பும் தொழிற்படு தளத்தில் தான் வாசகன் வடிவமும் அர்த்தமும் பண்பும் புலனாகின்றமை தீர்மானிக்கப்படுகின்றன. இந்த மொழிக்குறிக்கு எடுத்த நடை வெண் தளையும் ஆசிரியத் தளையும் இதுவே ஔவையை நினைவூட்டக் காரணமானது. புரிதல் என்பது கூட மொழிக்குறிக்கு இடையேயான தொடர்புறுத்தல். இவற்றை கூற்றுமுறைக் கற்பனை மொழிதல். (Dialogicimagination, ambiguity) எனலாம். அதாவது கூற்றிடை வைத்த குறிப்பு (எனத் தொல்காப்பியர் சுட்டும் வகை)

அடுத்து இந்நூல் வெளிவருவதற்குத் தோன்றாத்துணையாக இருந்த திரு. திருமதி ரஜீபன், இ. சரவணமுத்து, ஆசிரியர் ச. மார்க்கண்டு, கல்விப் பணிப்பாளர் சிவலிங்கம் முதலியோருக்கும், அணிந்துரை தந்துதவிய தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க. இரகுபரன் அவர்களுக்கும், அறிமுக உரை தந்த பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும், அட்டைப்படம் வரைந்து உதவிய ஓவியர் ரமணிக்கும், அட்டையை அச்சிட்டுத் தந்த யூனி ஆட்ஸ் நிறுவனத்தினருக்கும், நூலை அச்சிட்டுத் தந்த திருக்கணித பதிப்பகத்தின ருக்கும் நூலை வெளியிட்டு வைக்கின்ற தென்மராட்சி தமிழ் இலக்கிய மன்றத்தினருக்கும் என் மனமார்ந்த நன்றி.

வணக்கம்

**கல்வயல் வே. குமாரசாமி**

# படையல்

ஆவிநாயகன் பாவிநாயகன்

நாவிநாயகன்

நற்பதம் பற்றினேன்.

அடியும் முடியும் அயனும் அரியும் முடியும்

சிவமாயே ஓம்

## காப்பு

பிறைசடைக் கடவுள்

நிறை மகன் நினைவேன்

## வாழ்த்து

நின் மனை வாழ்க்கை

நன்மையே பொலிக

## நூல்

அறம் நனி சிறக்க

ஆனந்தம் பிறக்கும்

இன்பம் விளை வான்

ஈரம் பொழி வான்

வாய்ம்மை அணிமலர்

வாழ்க்கை மணிமலர்

உறுதி நிறை வான்

ஊற்றாய் சுரப்பான்

எளிமை இயல் வான்

ஏற்றம் தரு வான்

ஒளியில் மிளிர் வான்
ஓதி உணர் வான்

ஆளும் பணியும்
நாளும் வளரும்

ஐயம் அகல் வான்
வையம் திகழ் வான்

அடிமையிற் குடிமை
மிடிமையிற் கொடுமை

மனமே எல்லாம்
மனம் ஏய் எல்லாம்

அன்பு மொழி
தென்பு வழி

தண் புனல் ஆடும்
உண் பிணி ஓடும்

துன்புறு துயரம்
இன்புற இசைக்கும்

பண்புறு வார்த்தை
படி உயர் கீர்த்தி

தண் கடல் பெருகின்
மண் திடல் பருகும்

குற்றம் துறக்கப்
பெற்றோம் சிறப்போம்

முயல் முயலாமை
செயல் புரி ஆமை

கள் குடித்தால் வெறிக்கும்
காமம் நினைத்தால் வெறிக்கும்

மாலை வந்திடல் காண்
காலை வந்து இடும் காண்

மென்புலன் அன்பு
இன்புறு பண்பு

நல்லன ஆயின
தொல்லைகள் போயின

நுண் மணல் எண்ணீர்
தண் புனல் உண் நீர்

உண்ணீர் தண்ணீர்
பண்நீர் பண்ணீர்

மாரி வாய்க்கச் செய்
காரியம் வாய்க்கும்

மனை நடு தென்னை
உனக்கிடும் பின்னை

பஞ்சி அறியான்
துஞ்சி அறியான்

மாரி மலரின்
சீரும் குறையும்

ஒண்தொடி மடவார்
கண்படின் அடியார்

நோய்க்கு மருந்திவள்
வாய்க் கின் விருந்திவள்

பூப்பாய் விரிப்பாய்
காப்பாய் இருப்பாய்

பொருந்து மலர்கள்
பிரிந்தால் அலர்கள்

வளை நெகிழ நண்டூரும்
வளை நெகிழப் பெண்சோரும்

நெடுஞ்சுவர் இடுஞ்செயல்
இடும்பைக்கு அறிகுறி

விளைவயல் சீரால்
களைகளும் அழியும்

ஆண்மை வழிவழிக்
கேண்மை தெளிதெளி

பனிதுயில் புல்நுனி
மனிதனை அளக்கும்

பொய் வலை விரிப்பின்
மெய் பல மடியும்

மீன் எறி தூண்டிலின்
தீன் சுவை கொடிது

நெல்பல பொலிய
நல்லவை இயலும்

ஈரம் கூர
வேரும் ஊரும்

அடங்கிய மனசு
புடம்படும் இனிது

புனை புகழ் மகிழான்
தனை அவன் இகழான்

வறுமை சிறுமை
வலிமை களையும்

நல்லோர் நாடிச்
செல்வார் வெல்வர்

கடன் படான் வாழ்வில்
கவலைக் கிடம் கொடான்

தீயுறு மெழுகாம்
தாயுறு துயரம்

தன்சொல் உணர்ந்தார்
மேனி பொன் புனைந்தார்

சிறையழி புதுப்புனல்
நிறையளி செய்யும்

நலம்பெறு சுடர்நுதல்
நலம் பெறத் துலங்கும்

வெண்ணெய்த் தண்மை
உண்மைப் பெண்மை

துஞ்சு மனை கெடு
நஞ்சுக் கிருப்பிடம்

ஞாயிறு கதிரொளி
நீயிர் மறைப்பிரோ!

தன்னை அளந்தவன்
பொன்னில் உயர்ந்தவன்

தன் சொல் உணரின்
இன்சொல் வளரும்

ஒழுகு மதியார்
பழக விதியார்

தேனூர் வாழ்க்கை
திண்திறல் யாக்கை

மையல் நெஞ்சம்
ஐயம் தீரா

நல்லார் நாடிச்
செல்வார் வதுவை

கன்னி விடியல்
கவிதைக் குவியல்

சூதார் செயினும்
சாதனை இழப்பர்

விரிமலர்த் தாது
வண்டுக்குத் தூது

மீன்பிடி நாரை
தாள்படும் தீரவை

பசு மலர் வண்டுப்
பாரம் சுமக்கும்

குழவிக் கூறு முலையால்
கிளவிக் கூறு கவியால்

குவளை நாறத்
தவளை கூப்பிடும்

பூக் கள் மயங்கும்
பாக் கள் பயக்கும்

கடன்படு சோற்றினும்
கஞ்சி இனிது

கோவணம் போர்க்க உதவாது
ஆவணம் சேர்க்க உதவாது

சூட்டிலை மாடு
வீட்டுக்குக் கேடு

நீர் படர் நெறியில்
பார் படர் அறிவை

படியாப் பாவை
விடியா விளக்கு

தேர் மணிக் குரலால்
நேர் துயர் தணியும்

தவறிலர் ஆயினும்
தவறணை இடமே

உள்ளம் கையில்
உண்மை துலங்கும்

மனங்கொளாப் பிரியம்
தனங்கொளப் புரியும்

புது நிழல் இருந்தவன்
பழநிழல் தரியான்

தர்மச் சோற்றைத்
தின்றவன் தவிப்பான்

சுடர்விளங் கொளிச்சொல்
படர்ந்தன கவினே

வண்டுபடு நறும்பொழில்
உண்டது மறவார்

நாடு படு போர்
காடு படு வேர்

பருவம் செய்வன
பண்பின் வழித்தே

நீர் தரு விருந்தின்
சீர் பெருந் தகைத்தே

வாய்மொழி நோய்தணி
தாய்மையர் உளரே

பகைதணி பண்பால்
முகைவிடும் அன்பு

பெய்பனி நலியினும்
உய்பவர் சோரார்

மானம் துறந்தவன்
ஞானம் பிறந்தவன்

தீண்டத் தகாதன
வேண்டத் தகாதன

தப்புக்குள் சோரம்
உப்புக்குள் ஈரம்

நல்லவை வளரும்
அல்லவை அழியும்

பூவிலை வாசம்
வண்டுக்கு நேசம்

காமத்தைத் துறந்தோன்
நாமத்தாற் சிறந்தோன்

வழிபடு சிந்தனை
மொழிபடு வந்தனை

தெரு நாயோடு சருவாதே
பெரியோ ரொடு பகையாதே

சிறு நல் நட்புப்
பெறுமதி பெரிது

நேர் கோடுகள் ஓவியம் ஆகா
சீர்கேடுகள் காவியம் ஆகா

உயிரும் சரி
மயிரும் சரி

எச்சிலை நோக்கி நாய்
எச் சிலை நோக்கினாய்

செல்வம் இல்லாமை
செய்வினைப் பயனே

செல்வம் என்பது
சேர்ந்தோர்ப் பேணல்

கல்வி என்பது
கலங்கல் இலாமை

உப்பு கொப்பில்
உலகத் தில்லை

உப்புறை செப்பின்
அப்புறம் திரியும்

கண்ணீரை நீராட்டும் காதல்
கவிதையிலே தேரோட்டும் காதல்

மனையுறை மகளிரும்
வினை நிறை புரிவர்

சொல்லவிந் தடங்கினர்
எல்லையுள் உலகம்

பணிந்து வழி மொழியின்
துணிந்து பழி அழியும்

வாசகம் பயின்றோன்
பாசம் அகன்றோன்

குருவை நினைவான்
அருளில் புனைவான்

தந்தையை மதித்தவன்
தரணியில் உதித்தவன்

தாயைத் தொழுதவன்
கோயில் தொழுதவன்

பாசம் மிகுந்தான்
நாசம் வகுத்தான்

தன்னையே துறக்கும் காமம்
தவத்தையும் இறக்கும் காமம்

பணமுற்ற வரை நல்லவர்
பணமற்ற வரை கெட்டவர்

கண்ணிய மனத்தார்
எண்ணிய முடிப்பார்

ஐ உணர்வு அடங்கின்
வையகம் ஒடுங்கும்

திண்ணிய உளத்தார்
நண்ணிய நிறைப்பார்

அடி விழு வான்
முடி தொழுவான்

பதினாறில் பதி நாறும்
பதில் நாறில் பதினாறும்

உள்ளுறை பகைமை
தள்ளுதல் தகைமை

மெய்ந்நிறை சேர்த்தி
உய்நெறிக் கீர்த்தி

தொல்லையில் உதவினான்
எல்லையில் புகழினான்

நூல்தரு ஞானம்
சால் பெருஞ் சீலம்

நீதி விரதம்
சோதி சொரூபம்

முனி(வு) ஆறினை
இனி தேறினை

நனி மா தவமுடையான்
தனி நாயகம் அடைவான்

பல்லாண்டிசை
பல் ஆண்டு இசை

தருமம் தெரிவான்
கருமம் புரி வான்

இறை இறை முயற்சி
நிறை வளர் பயிற்சி

விழி விபத்தில் உயிர்பிறக்கும்
வழி விபத்தில் உயிர்பறக்கும்

உண்மை நட்பு
பெண்மைக் கொப்பு

குரு குரு என்றிரு
வரு மதி நன்றிரு

விளக்கு விளக்கு
உண்மை விளக்கு

அணி பயில் தொழிலால்
பிணி முயல் வழி மேல்

பணி ஓங்கப்
பிணி நீங்கும்

துணி வாங்க அணி
மணி வாங்கக் கணி

திணி திணி அறத்தை
கணி அணி குணத்தை

நடை மடம் மேவின்
நாண் அணி பாவும்

விறல் நடை சேரின்
திறல் அடை தேறும்

காமம் விரும்பின்
யாமம் சுருங்கும்

காமம் சுருங்கச்
சேமம் நெருங்கும்

விழைந்தார் வினையின்
விழுப்பயன் நுழைந்தார்

மண்படு பண்பு
பண் கொடு உண்டி

ஊர் ஊர் சேரச்
சீர் பேர் சேரும்

உழைத்த தவன்
தழைத் தவன்

கரை மனது
உரை இனிது

காமம் அரும்ப
மோகம் நெருங்கும்

கரை அறியான்
வரை அறியான்

ஆற்று நன்மை
ஊற்றில் தெரியும்

தெரி கோதை நல்லார்
ஒரு வாதும் செய்யார்

இருள் மலி நெஞ்சம்
பொரு களம் போலும்

நல்ல படி நல்ல
நல்ல படி அப்படி

மணி கேட்கப் பிணிதீரும்
பணி நோற்க அணிசேரும்

பெரியோர் கேண்மை
பிள்ளைகள் ஆண்மை

பதியும் பதியும்
பதியும் துதியும்

வழுக்களை வழுக்களை
வாழ்வு மலரும்

பற்றப் பற்றக்
கற்பது சிறக்கும்

கற்பது கற்பது
நிற்பது நிலைப்பது

நிறையும் குறையும்
குறையும் நிறையும்

குருவை நினை வான்
அருளைப் புனைவான்

பணி வாய் அன்பே
அணுகும் துணிவாய்

மெய் அன்பு செய்வார்
கை வந்த செய்யார்

புல்லின் பூவிலும்
பொருந்துமோர் வண்டு

கல் என்றிருப்பார்
சொல் வென்று இருப்பார்

விசிறி அற்றால்
சிவம் சவமாகும்

அறிவது பெருகச்
சிறுமைகள் தகரும்

மறு மொழி அறி வழி
பெறு மொழி இறுபழி

இரு நிதி மதி பதி
தரு கதி திரு துதி

அடங்க அடங்கத்
தடங்கும் துயரம்

வாசிப்பார் யோசிப்பார்
பேசிப்பார் சீவிப்பார்

மனைவி காரம்
மனை விகாரம்

பொருளா? தாரமா?
பொருள் ஆதாரமா?

நாடு அறியா நாடு
பாடு அறியா பாடு

அதிகாரம் கூட
விதி பாரம் ஆகும்

புல்நுனிப் பூவும்
நல்மணம் மேவும்

பகைக்கும் பசிக்கும்
பிணிக்கும் வறுமைக்கும்

கழுவாக்கால் பட்டால்
எழுந்திரு எழும் திரு

வாழ்வு ஆருக்காக?
வாழ்வாருக்கு ஆக!

மேலானதாய் இருக்க!
மேலான தாய் இருக்க?

என் அகலை ஒளி ஏற்ற
என அகலை ஒளி ஏற்று

செப்பாய் மணப்பாய்
சிவப்பாய் விழிப்பாய்

நீர் வழிந்த தடங்கள்
நீர் வழிந்த தடம் கள்

அருளா தாரம்
அருள் ஆதாரம்

இருளா தாரம்
இருள் ஆதாரம்

நுண்மணல் அடைகரை
தண் கடல் உடைதரும்

அழி பசி தீர்க்க
வழி பல பிறக்கும்

அழல் வினை அமைந்தால்
நிழல் மனை நுழையும்

விழுத்த நினைத்(து) ஆர்
பழத்தைச் சுவைத்தார்

வார் முகில் முழக்கின்
ஊர் வயல் கொழிக்கும்

சூது களைந்தார்
தீது களைந்தார்

ஒண் நுதல் கருவில்
எண்ணுதல் உருவில்

சால்பும் செம்மையும்
நூல்பால் இல்லை

கார் மழை நேர் பெற
ஊர் வளஞ் சேர்வுறும்

பசிக்கப் புசிக்கப்
பகுத்துண் பது பலம்

களை வயல் விளைவயல்
மழை தவழ் குளவயல்

வளனும் ஆண்மையும்
உள நலத் தாலுறும்

மடியா உள்ளம்
விடியா விளக்கு

நெடுநுண் கேள்வி
தொடும் பண் வேள்வி

புரைதீர் ஒண்மை
புறஞ் சொற் கேளா

நெஞ்சு புகழ் ஊக்கம்
பஞ்சி அகல் ஆக்கம்

ஏம வாழ்க்கை
நாமம் அறியா

சேறு செய் மாரி
சோறு பெய் வாரி

இனியாரைத் துணைக் கொள்வாய்
இனி யாரைத் துணைக் கொள்வாய்

இனி யர்ர் உளர்?
இனியார் உளர்

போர் நிழல் படியின்
வேர் முதல் மடியும்

வரம்பு இல் வெள்ளம்
புலம் கெட நெரி தரும்

துணிவுடை ஆண்மை
புரிபணி மேன்மை

பாசத்தை விட்டார்
ஈசனைத் தொட்டார்

மனம் நிறை வெய்தின்
பிறவியும் இனிதே

நெகிழ் மன முடையார்
புகழ் தனியுடையார்

வருந்துவார்க் கீசன்
நாமம் மருந்து

உரையும் பொருளும்
உணர்வில் திரையும்

பற்றாவான் பற்றா வான்
கற்றாவான் கற்(று) ஆவான்

ஆள்வான் அருள்வான்
தாள் வான் பணிவான்

உணரும் கால் ஒன்றைப்
புணருங்கால் இன் ஒன்றை

உடலும் உயிரும்
விரையின் மலரும்

அன்பு மொழி இன்பம் அளி
தென்பு நிறை நெஞ்சில் உறை

நம்பிக்கை ஊட்டும்
நம்பிக் கை ஊட்டும்!

பரிசு இல் வாழ்க்கை
பரிசில் வாழ்க்கை

சிறந்த நல்குமதி
சிறந்த நல்குமதி

மணி வளர் ஓசை
பணி துணி பாதை

காதை க் காதை
மேதைமைத் தாதை

நினை ஆய் நினையாய்
வினையாய் வினை ஆய்

இரவிரவாய்ச் சிகரமடி
விடிஞ்சால் தகரமடி

அறிவு கரை யாது
செறிவு திரை யாது

உள்ளம் கரை வாய்
உரையிற் கனி வாய்

உமை வணங்கினான்
உமை வணங்கினான்

மொழி உம் மொழியும்
பொருளில் வழியும்

முறுக முறுக
முயற்சி வலுப் பெறும்

பயிற்சி அனுபவம்
முயற்சி நிறைதளம்

அறிவும் அருளும்
பொருளும் வேண்டும்

இறை உற வென்றும்
பல துறை காட்டும்

மையல் நூர
ஐயம் தீரும்

கேளாக் காது
பாதிக் காது

கேட்கும் காது
முழுமைக் காது

தெளிதல் என்பது
அறிவின் கொழுந்து

தெளியத் தெளிய
முழுமை தெரியும்

சிந்தனைத் தெளிவு
அநுபவப் பிழிவு

தனியச் சாரின்
இனிமை சேரும்

தனிய இருக்க
இனியார் வருவர்?

அகங் காரம் அதிகாரம்
அதி காரம் அகம் காரம்

அகந்தைப் பட்டார்
சுகம்கைப் பட்டார்

பாம்பு குடித்தால் விஷம்வரும்
பசுக் குடித்தால் பால் வரும்

விடுதலைப் பற்றது
விடுதலைப் பட்டது

மெல்ல மெல்ல
எல்லாம் கரையும்

மனத்தை வென்றார்
சினத்தைக் கொன்றார்

தீயவை தீயவை
தூயவை தூய் அவை

நறும்புகை நிரம்பில்
பெறும் பயன் வரம்பில்

நா ஊறு பட்டார்
கண்ணூறு பட்டார்

மதியை ஏவுவான்
விதியை மேவுவான்

புலி கொல்வது மதி
கிலி கொல்வது விதி

சாநாள் வாழ்நாள்
அறிந்தார் இருந்தார்

செப்பு உள் முத்து ஆய்
செப்புள் முத்தாய்

முறுகிய அன்பில்
அறுவது நாணம்

பட்டு உத்தரித்தேன்
பட்டுத் தரித்தேன்

இனி அவன் இனியவன்
இனி அவள் இனியவள்

சொல் அவி இல்லம்
பல் வளச் செல்வம்

அன்புறை வழி இல்
இன்பம் பொழியும்

ஒழுக்க நெறி நின்று ஆர்
விழுப்ப நெறி சென்றார்

உய்நெறி அறிவான்
பொய் நெறி தவிர்வான்

பெயர் உள் அவரைப்
பெயர் உள்ள வரை

மூலம் தேடச்
சீலம் கூடும்

காமம் கரையும்
காதல் வரையும்

பெண்பால் அப்பால்
பண்பால் முப்பால்

காதல் திரையும்
நோதல் வரையும்

மதியே ரதியும்
பதியே விதியும்

மனமே சரியும்
மனமே விரியும்

மின்னிற் பொலியும்
கன்னி (க்) கவிதை

ஒன்றும் இல்லை
ஒன்றுமில்லை

நாடவும் தேடவும்
பாடவும் கூடும்

கோடியுள் ஒரு சிலர்
கோடியில் ஊர் சிலர்

இறையும் இல்லை
முறையும் இல்லை

சுய முரண் பாடு
பய முரண் பாடு

மன்மதப் புன்னகை
மஞ்சக் கனவுகள்

நல்லாக்களாய் இருப்பார்
நல் ஆக்களாய் இருப்பார்

குரு இருந்து சொன்னவை
குரு விருந்து சொல்லவை

விடிய விடிய
மடியுள் தேட்டம்

உயிரும் உயிரும்
கலக்கும் நேயம்

உடலும் உடலும்
உலுக்கும் காமம்

ஒளியுறும் அறிவு
தெளிவுறும் உறவு

வெறுமை மனசு
இறைமைத் தவிசு

வினைகள் களைய
மனநிலை முதிரும்

புனிதப் பணியால்
மனிதப் பிணிதீர்

மோகம் அகல
யோகம் குலவும்

பணிவைப் பணிகொள்
துணிவை அணிகொள்

உள்ளம் கனியக்
கள்ளம் தணியும்

முறை தவறா வேகம்
நிறை தவறா யாகம்

மெய்மறந்து மெய்மறந்தார்
பத்தியத்தைக் கைதுறந்தார்

கவிதைக்கு அலை
கவிதைக் கலை

கலக்கிய சிக்கனம்
இலக்கியப் பக்குவம்

பூவைத் திரு
பாவை த்திரு

மனத்தொடு மனம்தொட
இனத்தொடும் மனம்தொடும்

அறுவது தொடங்க
அறுவது வேண்டும்

உடம்படு மெய்வர
உடன்படும் உறவு

உள்ள வாழ்வே
உயிரின் வாழ்வு

எழுத்தும் சொல்லும்
சொல்லும் எழுத்தும்

ஆழ்வாரில் ஆழ்வார்
வாழ்வார் இல் வாழ்வார்

பழியில் விழுந்தார்
வழியில் அலைந்தார்

நாவால் அடிபட்டார்
நோவால் குடி கெட்டார்

இதழ்பிரியாப் புன்சிரிப்பு
கண்க(ளின்) மௌனமொழி

காதல் ஆதரம்
காதலா தரம்

தன் குடி விட்டார்
அன் படிப் பட்டார்

செய்த கவினுக்காம்
செய் தகவினுக்கு ஆம்

முழு வலி முதலை ஓர்
முழு வலி முதலை ஓர்

கற்பதை மதித்தால்
அற்புதம் திகழும்

வாழ்க்கைத் துணையே
வாழ் கைத்துணையாம்

தன்மானம் என் மானம்
ஆனால் வரு(ம்) மானம்

அறத்துணை யாவும்
அறத் துணையாகும்

தாம் பத்தியமே
தாம் பத்தியம் ஆம்

பொருளா தாரம்
அருளா தாரம்

வரமறுக்கும் ஆசை களை
தரமறுக்கும் ஆசை களை

நேர்த்தி செறியக்
கீர்த்தி நிறையும்

கற்றார் அறிந்தார்
பெற்று ஆர் உவந்தார்

தொழும் நீர் வடிவில்
எழுஞ் சீர் வடிவில்

நம்பரனை நம்பு அரனைச்
செம் பொருளில் எம் பரனை

உழும் நீர் வயலுள்
செழும் சீர் கிளைக்கும்

தேன் ஆர் இன் சொல்
தான் ஆர் தன் சொல்

வருமானம் தவிர்ப்பான்
வருமானம் குவிப்பான்

பெற்றார் பெற்றார்
கற்று ஆர் உற்றார்

வண்டார் பூ மலரார்
கண்டார் தாமலரார்

பற்றார் பற்றார்
முற்றார் முற்று ஆர்

மறையானை மதியானை
நிறையானை பணி ஆணை

கனி வாய் இன் சொல்
இனி தாய் உன் சொல்

படி யார் அரசு
குடி யார் அரசு

பிள்ளை உள்ள தாய்
பிள்ளை உள்ளத்தாய்

நீர் ஓடினால் நதி
நீர் தேங்கினால் விதி

கலையும் ஞானம்
நிலையும் மோனம்

ஞானமும் அருளும்
மோனமும் மருளும்

இற்பயன் தனி
கற்பகக் கனி

உள் ஒளிப் பெருக்கு
சொல் வழிச் செருக்கு

நீரும் வேரும்
ஆரச் சேரும்

உண்மை தெய்வம்
உணரின் உய்வம்

நகரும் நகரச்
சிகரம் சமைக்கும்

உச்சி உச்சி
ஏறின் ஏறும் மெச்சும்

பிடிச்சுப் பிடிச்சு
முடிச்சு முடிச்சு

இனித்தான் இனித்தான்
இனித்தாள் இனித்தாள்

இனித்தேன் இனிப்பேன்
தனித்தேன் வருந்தேன்

நம்பிக்கை வைப்பான்
நம்பிக்கை வையான்

உணர்ச்சி கரமாய்
உணர் சிகரமாய்

நிறை மொழி வாய்
உறை மொழி வாய்

அறச்சுவர் அமைத்தார்
புறச்சுவர் சமைத்தார்

சொல் களை நீக்கு
சோதி பிறக்கும்

அம்மையே அப்பா
தம்மையே ஒப்பா

நாக்கு அழுக்குப்
போக்கு இழுக்கு

சாத்தான் தொடர்பு
முடிவில் சாத்தான்

வண்ணமே கலை
வண்ணம் மேகலை

மனைவி நாயகன்
மன விநாயகன்

சோதி இறைவனைச்
சோதி இறைவனை

நீதி இறைவனை
நீ தீ இறைவனை

தத்தளித்தவன்
தத்து அழித்தவன்



கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி சன்னத்த வெறியுடைய ஒரு கவிஞர். சமூக அநீதிகளையும் ஏமாற்றுகளையும் கண்டு கொதித்தெழும் கவிஞர். அக்கொதிப்பினைச் செழுமையான சொற்களினாலே கவிதை புனைந்து வெளிப்படுத்துபவர். அதேவேளை சிரித்து விளையாடி மகிழும் குழந்தைகளுக்குத் தேனான பாட்டுக்கள் தந்து மகிழ்பவர். இன்று இலங்கையில் குழந்தைக்கவி பாடும் கவிஞர் வரிசையில் முதல்வரிசையிலே நிற்பவர் கல்வயலார்.

"சீ" என்று இகழ்பவற்றை இகழவும், "ஓ" என்று புகழ்பவற்றைப் புகழவும் நன்கு தெரிந்த கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி தன்கவிதைகளைத் தானே படிக்கும்போது கவிஞருடைய உள்ளார்ந்த உணர்வுகள் நன்கு வெளிப்படுவதைப் பல கவியரங்குகளிலே நான் கண்டுள்ளேன். சாதாரண வேளை களில் அடக்கமாக இருக்கும் கல்வயலாரா இப்படித் தர்மாவேசம் கொள்கிறார் என்று பலர் வியப்பதுண்டு.

ஈழத்துப் பெருங்கவிஞர் முருகையன் வழியிலே வந்தவர் கல்வயலார். ஆனால் அவர்களின்று வேறுபட்டுத் தனக்கெனச் சில தனித்துவங்களைக் கொண்டவராகக் கவிஞர் கல்வயல் குமாரசாமி திகழ்கிறார்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

COVER PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195